# முள்ளியானில் சலாடின் வாகனம் தகர்ப்பு
# புல்லாவெளி காவலரண்கள்மீதுதாக்குதல்

பக்கங்கள் நான்கு விலை ரூபா:- 4 - 50

# முரசொலி

முரசு 05 ஒலி 237 பிரசோற்பத்தி ஆடி 07 ( 23 - 07 - 1991 ) செவ்வாய்

நேற்றுக் காலை மீண்டும் முள்ளியான் பகுதியில் படையினர் மீது விடுதலைப் புலிகள் கடும் தாக்குதலை ஆரம்பித்தனர். காலை 10.30 மணியளவில் ஆரம்பித்த இத்தாக்குதல் மாலையில் மீண்டும் உக்கிரமடைந்ததாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன. நேற்றுக்காலையில் நடைபெற்ற மோதல்களின் போது படையினர் தரப்பில் உயிர்ச்சேதம் ஏற்பட்டுள்ளதாகவும் சலாடின் கவச வாகனம் ஒன்று தாக்குதலில் சேதமடைந்ததாகவும் தெரியவருகிறது. இதேவேளை நேற்று மாலை 5.30 மணியளவில் புல்லாவெளிப் பகுதியிலும் மோதல்கள் நடைபெற்றுள்ளதாகச்செய்திகள் தெரிவிக்கின்றன. புல்லாவெளியில் அமைக்கப்பட்டிருந்த படையினரின் காவலரண்கள் மீது விடுதலைப்புலிகள் தாக்குதலைத் தொடுத்துள்ளனர்

★ புல்லாவெளி, முள்ளியான் பகுதிகளில்—

# புலிகளிடம் சிக்கிய ராணுவ அணி
# 100 சிப்பாய்களை இழந்தது

## இரண்டாகப் பிரிந்த படையணியில் 29 சடலங்கள் மீட்கப்பட்டன

ஆனையிறவு நோக்கி நகர முற்பட்ட படையணியை இடையில் ஊடறுத்து விடுதலைப்புலிகள் தாக்குதல் நடாத்தியதில் நூற்றுக்கு மேற்பட்ட படையினர் பலியாகினர். இரு மடங்கிலான சிப்பாய்கள் காயமடைந்தனர்.

புலிகளின் தாக்குதலில் இரண்டாகப்பிரிந்து விட்ட படையினர் அணியில் முள்ளியான் பகுதியில் புலிகளால் முற்றாகச்சுற்றிவளைக்கப்பட்ட படையினருக்கே அதிக சேதம் ஏற்பட்டுள்ளது.

முற்றுகையில் சிக்கிய இவ்வணியில் உள்ள சிப்பாய்களில் 60 பேர் புலிகளுடனான மோதலில் பலியாகினர். நூற்றுக்கும் மேற்பட்ட சிப்பாய்கள் காயமடைந்தனர்

கொல்லப்பட்ட படையினரின் 29 சடலங்கள் மீட்கப்பட்டன. இம் மோதலில் 28

—04ஆம் பக்கம் பார்க்க

புலிகள் பிரமுகர் கருத்து

## ராணுவம் கூறுவதைப் பார்த்தால் இப்போதுமுகாமைஎட்டியிருக்கலாம்

ஆனையிறவு மோதல் தொடர்பாக அரசு அடிக்கடி வெளியிடும் செய்தி வியப்பாக உள்ளது என ஜேர்மனியில் உள்ள புலிகளின் பிரமுகர் ஒருவர் குறிப்பிட்டுள்ளார்

ஆனையிறவு தொடர்பாக இராணுவம் கூறும் கணக்கைப் பார்த்தால் படையினர் இப்போது முகாமைச் சென்றிருக்கலாமேஎனஅவர் குறிப்பிட்டதாக பி. பி. ஸி தெரிவித்தது

வடம. கிழக்கு, ஆனையிறவுப் பகுதியில்

## விமானக்குண்டு வீச்சு ஆரம்பம்

ஆனையிறவு நோக்கி வந்த படையினரை விடுதலைப்புலிகள் கடுமையாகத் தாக்கி ஒரு பகுதியினரை அழித்தனதையடுத்து தற்போது அப்பகுதியில் கடும் விமானக் குண்டு வீச்சு ஆரம்பமாகியுள்ளது

நேற்றுமாலை 6 மணியளவில் ஆனையிறவு, கட்டைக்காடு, வெற்றிலைக்கேணிப் பகுதிகளில் பல விமானங்கள் தாக்குதல் நடாத்தின.

இருவை-12 விமானங்கள், 4 பொம்மர்கள், சீ-பிளேன்,

— 04 ஆம் பக்கம் பார்க்க

## படையினரை மறுசீரமைக்கும் வரை விமானத்தாக்குதல் நடைபெறுமாம்

ஆனையிறவை நோக்கி முன்னேற முயலும் இரு இராணுவ அணிகளும் மேலும் முன்னேறுவதற்கு முன் தம்மை மீண்டும் பலப்படுத்துவதில் ஈடுபடுகின்றனராம்.

பாதுகாப்பு அமைச்சுநேற்று மாலை விடுத்த இவ்வறிவிப்பு இப்படையணிகள் புலிகள் அதிரடித் தாக்குதலில் பலத்த சேதத்திற்கு உள்ளாகியதையே சுட்டிக்காட்டுகின்றது.

படையினர் தம்மை மறுசீரமைக்கும் வரையிலும் புதிய அணி இவர்களுடன் இணையும் வரையிலும் விமானத் தாக்குதல் தொடர்ந்து நடைபெறும் என பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

## வவுனியா காவலரண் தொடர்மீது தாக்கு

வவுனியாவில் நேற்றுக் காலை பல தொடர் இராணுவ காவலரண்கள் மீது விடுதலைப்புலிகள் திடீர்த் தாக்குதல் நடாத்தியதில் 5 காவலரண்கள் அழிக்கப்பட்டன.

நேற்று அதிகாலை 1.30 மணியளவில் வவுனியா சூடுவெந்த புலவுக்கும் சின்னகுளத்துக்கும் இடையில் அமைந்துள்ள தொடர் காவலரண்களே புலிகளின் தாக்குதலுக்கு இலக்காகின.

—04ஆம் பக்கம் பார்க்க

## அதிரடித் தாக்குதலில் மீட்கப்பட்ட ஆயுதங்கள்

கட்டைக்காட்டிலிருந்து ஆனையிறவு இராணுவ முகாமைக் கைப்பற்றும் நோக்குடன் முள்ளியான் பகுதிக்கும் புல்லாவெளிப் பகுதிக்கும் வந்த இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிப் போராளிகள் தொடுத்த தாக்குதலில் பல நவீன ரக

— 04 ஆம் பக்கம் பார்க்க

## 28 வேங்கைகள் வீரமரணம்

புல்லாவெளி - முள்ளியான் பகுதியில் படையினருக்கு எதிரான மோதலில் இருபத்தெட்டு புலிப் போராளிகள் வீரமரணத்தைத் தழுவிக் கொண்டுள்ளனர்.

கடந்த இரண்டு நாள்களாக இடம்பெற்ற இப்போரில் பெண் போராளிகளும் வீரமரணமடைந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. ப-11

## ஆனையிறவை அடையும் தினத்தைக் கூற முடியாதாம்

வடமராட்சி கிழக்குக் கரையோரம் இறக்கப்பட்ட படையினர் நேற்று ஆனையிறவை சென்றடைவார்கள் எனஎதிர் பார்க்கப்பட்ட போதிலும், தற்போதும் மோதல் நடைபெற்றுவருவதாக ஏஜென்சிச் செய்திகள் தெரிவித்தன.

படையினர் எப்போது

—04ஆம் பக்கம் பார்க்க

## சடலங்கள் மீள் ஒப்படைப்பு இராணுவம் பதிலில்லை

புல்லாவெளி, முள்ளியான் பகுதியில் நேற்று முன்தினம் விடுதலைப்புலிகள் நடாத்திய அதிரடித்தாக்குதலில் பலியான சடலங்களை மீள ஒப்படைப்பதுகுறித்துசர்வதேசச் செஞ்சிலுவைச் சங்கத்துடன் தொடர்பு கொள்ளப்பட்டுள்ளது.

—04 ஆம் பக்கம் பார்க்க

## போர் தொடர்பாகத் தெருக்கூத்துக்கள்

ஆனையிறவு - கட்டைக்காட்டில் மட்டுமல்ல தமிழீழத் திசையெங்கும் பெரும் போர் மூண்டுவிட்டது.வீட்டுக்கொரு வீரர் நாட்டுக்காக வாரீர் எனும் கரகோஷத்துடனும் பறை தட்டலுடனும் தெருக்கூத்து ஒன்று நேற்றிரவு கல்வியங்காட்டுப் பகுதி

—04ஆம் பக்கம் பார்க்க

இராணுவம் கூறுகிறது

## காற்றும் மழையுமே முன்னேறத் தடையாம்!

கட்டைக்காட்டுப் பகுதியில் இருந்து இராணுவத்தினர் ஆனையிறவு இராணுவ முகாமை நோக்கி மேலும் முன்னேற முடியாது இருப்

—04ஆம் பக்கம் பார்க்க

## கனவை ரசிக்கவும் வீடியோ கசெற்!

நாம் கனவில் என்ன காண்கிறோம், எவ்வளவு நேரம் நாம் கனவு காண்கிறோம் என்பதைக் கணக்கிடக் கூட இங்கிலாந்தில் உள்ள விஞ்ஞானிகள் நவீன விஞ்ஞானத்தின் உதவியால் கருவி ஒன்றைக் கண்டு பிடித்துள்ளார்கள். இக்கருவி நாம் காணும் கனவை ஒளிப்பதிவு நாடாவில் உடனுக்கு உடன் பதிவு செய்யக்கூடிய ஆற்றல்மிக்கது. பதிவு செய்யப்படும் நாடாவை நாம் விரும்பிய நேரத்தில் டெக்கில் போட்டுப் பார்த்து மகிழலாம். இதுவரை காலமும் ஒருவர் நித்திரையில் கனவு காணும் நேரம் ஆகக்குறைந்தது சில வினாடிகளும் ஆகக் கூடியது அரை மணித்தியாலம் என்று தான் பரவலாக நம்பப்பட்டு வந்தது. ஆனால் விஞ்ஞான முறைகளின் கீழ் நடத்தப்பட்ட ஆய்வு ஒன்றில் ஒரு நபரின் கனவு நிலை 2 மணித்தியாலங்கள் 23 நிமிடங்கள் நீடித்துள்ளது. (16)

# ஆனையிறவு யுத்தத்தின் பின்னர்
# ஸ்ரீலங்கா நிர்வாகம் சீர்குலையும்

எம் இயக்கத்தை எந்த நாடும் அங்கீகரிக்காத நிலையில் எம் தமிழீழ மக்களினால் முழுமையாக அங்கீகரிக்கப்பட்ட நிலையில் எமது தலைவனுக்குக் கீழ் போராட்டம் நடாத்திக் கொண்டிருக்கின்றோம்.

எம் நாட்டு சொந்த மக்களையே நம்பி போராட்டத்தை முன்னெடுத்துச் செல்கின்றோம். உலகத்தில் தமிழன் பிரதிபலிக்கப்படுகிறான் என்றால் எமது இயக்கம் விடுதலைப்புலிகளின் போராட்டத்தினால்தான்.

இவ்வாறு விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி முக்கியஸ்தர் சலீம் யாழ்போதனா வைத்தியசாலையில் ஊழியர்கள் மத்தியில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் தெரிவித்தார். தொடர்ந்து உரையாற்றிய அவர்; தமிழ் மக்கள் தரும் ஆதரவுடனும் மனோ வலிமையுடனுமே நாங்கள் ஆனையிறவு யுத்தத்தில் நிற்கிறோம்.

இப்போராட்டத்தில் நாம் முழுமையான வெற்றியைப் பெறுவோம். ஆனையிறவுப் போருக்குப் பின்ஸ்ரீலங்கா அரசின் நிர்வாகங்கள் தமிழ்ப் பிரதேசங்களில் பூரணமாக இருக்காது. அதற்குப் பின்னர் எங்களூடாகவே நிர்வாகம் இயங்கக் கூடிய விதத்தில்பெரு மாற்றங்கள்ஏற்படப் போகின்றன.

வைத்தியசாலை ஊழியர்கள் இப்போர்க்கால கட்டத்தில் முழுமையான ஒத்துழைப்பை வழங்கவேண்டும். வைத்தியசாலை எப்போதும் பூரண சுத்தமாக்கப்பட்டிருத்தல் வேண்டும். அதற்கு எல்லா ஊழியர்களும் ஒத்துழைக்க வேண்டும்.

ஒழுங்கு முறைப்படுத்தி செயற்பட வேண்டும். இவ் வைத்தியசாலைக்கு போதிய வசதிகள் தற்போது இல்லாததைப் புரிந்து கொள்ளக் கூடியதாக இருக்கிறது. எங்களால் நிறைவேற்றி வைக்கக் கூடிய விதத்தில் அதனைச் செய்து தருவோம் என்றார். (79)

ராஜீவ் கொலை தொடர்பான

## அநாமதேய அழைப்புக்களை கட்டுப்படுத்த நடவடிக்கை

ராஜீவ் கொலை தொடர்பாக புலன் விசாரணை நடாத்திவரும் சி. பி. ஐ. குழுவினர் தங்கியுள்ள 'மல்லிகை' கட்டிட தொலைபேசிகளுக்கு வரும் அநாமதேய அழைப்புக்களை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இத்தகைய அநாமதேய அழைப்புக்களை விடுப்பவர்கள் தொடர்பு கொள்ளும் தொலை பேசி இணைப்பை உடனடியாக அறியக்கூடிய புதிய தொலை பேசி இணைப்பை புலனாய்வுக் குழுவினர் பொருத்தியுள்ளனர்.

தொலை தொடர்பாகத் தொலைபேசி மூலம் தகவல்கள் தருவதாகக் கூறி பல பொய்த் தகவல்கள் வழங்கப்பட்டன. இதனால் சி. பி. ஐ. குழுவினர் பல சிக்கல்களை எதிர்நோக்க வேண்டியிருந்தது.

## கால் நடைகள் படையினரின் உணவாகின்றன

வெற்றிலை கேணியில்படையினர் தங்கியுள்ள பகுதிகளில் உள்ள கால் நடைகள், மற்றும் கோழிகள் அனைத்தும் படையினரின் உணவாகின்றனவாம்.

இதேவேளை இருபகுதியினருக்கும் இடையே நடைபெறும் யுத்தத்தில் சிக்கி அப்பகுதியில் பல ஆடு மாடுகள் இறந்துள்ளதாகவும் தெரியவருகின்றது.

சில பகுதிகளில் இதன் காரணமாக துர்நாற்றம் வீசுவதாகவும்தெரியவருகின்றது. 4350

## 'சாத்தானின் படைகள்' என்ற நூலே பறிமுதலானது

இந்தியப்படைகளின் அட்டூழியங்கள் குறித்து எழுதப்பட்ட நூலின் 75,000 பிரதிகள் சென்னையில் பொலிஸாரினால் பறிமுதல் செய்யப்பட்டிருப்பது தெரிந்ததே.

இந்நூலுக்கு 'சாத்தானின் படைகள்' எனப்பெயரிடப்பட்டிருந்ததாக தகவல்வெளியாகியுள்ளது நூலை வெளியிட்ட அச்சக ஊழியரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

## புதுக்குடியிருப்பில் மலேரியா நோய்

புதுக்குடியிருப்பு மற்றும்அகதிகள் செறிந்து வாழும் பகுதிகளில் மலேரியா மற்றும் தொற்று நோய்கள் வேகமாகப் பரவிவருகின்றன.

குறிப்பாக ஆயிரக்கணக்கானோர்இந்நோயினால்பீடிக்கப்பட்டுவருதாகவும் இப்பகுதி வைத்தியசாலைகளில் இந் நோய்களைக் கட்டுப் படுத்தக் கூடிய மருந்து வகைகள் இல்லாததால் வைத்திய அதிகாரிகள் கஷ்ட நிலையை எதிர் நோக்க வேண்டியுள்ளதாகவும் தெரியவருகிறது. (38)

ராஜீவ் கொலை தொடர்பாக

## அகதி முகாமிலிருந்து மேலும் இருவர் கைது

ராஜீவ் காந்தி கொலை தொடர்பாக விசாரணை நடத்திவரும் புலனாய்வுக்குழு மதுரை அகதி முகாமில் மேலும் இரு இலங்கைத் தமிழரைக் கைது செய்துள்ளது. இவர்கள் கொலைதொடர்பாகத் தேடப்பட்டுவரும் சிவராஜன் என்பவருக்கு ஆதரவளித்தவர்கள் எனக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

இதனிடையே சில தினங்களுக்கு முன்னர் சென்னை கீழ்ப்பாகத்தில் இடம்பெற்ற குண்டுவெடிப்பில் காயமடைந்த பெண் நேற்றுமுன் தினமிரவு மரணமாகிவிட்டார்.

## பண்டத்தரிப்பில் தடுப்பூசி

பல மாதங்களாக இல்லாதிருந்த முக்கூட்டு நோய் தடுப்பூசி நாளை பண்டத்தரிப்பில் அரசினர் வைத்திய சாலையில் போடப்படவுள்ளது.

அனைவரும் ஒரு வயதிற் குட்பட்ட குழந்தைகளை கொண்டுவந்துதடுப்பூசிபோடுமாறும், ஒரு வயதிற்குள் தடுப்பூசி எடுக்காத குழந்தைகளையும் அன்று கொண்டு வருமாறு புதிய சுகாதாரப் பரிசோதகர் அறிவிக்கின்றார். (37)

## பதிவு செய்யாதவர்கள் தமிழகத்தில் கைது

தமிழகத்தில் அகதிமுகாம்களுக்கு வெளியே உள்ள இலங்கைத் தமிழர்கள் 2,000 பேர் கைதாகியுள்ளனர்.

இவர்கள் தமிழகப் பொலிஸாரிடம் தம்மைப் பதிவு செய்யவில்லை என்ற குற்றச் சாட்டின் பெயரிலேயே கைதாகியுள்ளனர்.

இதுவரை தமிழக உத்தரவின்படி இருபத்தெட்டாயிரம் பேர் மட்டுமே பொலிஸாரிடம் தம்மைப் பதிவு செய்துள்ளதாகத் தமிழகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## இடம்பெயர்ந்த குடும்பங்கள் அவல நிலையில்

வெற்றிலைக்கேணியில் இராணுவத்தினர் நிலை கொண்டதையடுத்து வெளியேறியோரில் இரண்டாயிரம் குடும்பங்கள் தங்குவதற்கு இடவசதிகள் இன்றி தெருக் கோடிகளிலும் திண்ணைகளிலும் காணப்படுகின்றன.

குழந்தைகளுடன் வரும் இக்குடும்பங்கள் பால்மா வசதிகள் இல்லாததினால் குழந்தைகளைப் பராமரிக்க முடியாமல்அவதியுறுகின்றன

இவர்களுக்குப் போதிய உணவு வகைகள், சுகாதார வசதிகள் இல்லாததினால் தொற்று நோய்களுக்கு ஆளாகும் அறிகுறிகளும் தென்படுகின்றன. (38)

## குண்டு வெடிப்பு ஒருவர் கைது

சென்னை கீழ்ப்பாக்கம் சட்டக்கல்லூரி வளாக குண்டு வெடிப்புத் தொடர்பாக ஒருவர் தமிழகப் பொலிஸாரினால் கைதாகியுள்ளார், மூவர் தேடப்படுகின்றனர்.

## இறங்குதுறை ஊரடங்கு நீக்க இராணுவம் மறுப்பு

முள்ளியவாய்க்கால் இறங்குதுறையில் ஊரடங்குச் சட்டத்தை நீக்குமாறு கோரிய முல்லைத்தீவு அரசாங்க அதிபரின்கோரிக்கையைஇராணுவக் கூட்டுப்படைத் தலைமை அலுவலகம் நிராகரித்து வருகிறது.

கொழும்பிலிருந்து கப்பல் மூலம்கொண்டு வரும் உணவுப் பொருள்கள் ஊரடங்கு வேளையிலேயே அடிக்கடி வருவதாகவும், இவ் உணவு வகைகளை இறக்குவதற்கு இலகுவாக துறைமுகப்பகுதியில் ஊரடங்கை நீக்குமாறு இராணுவக் கூட்டுப்படைத் தலைமை அலுவலகத்தைப் பல தடவைகள் கேட்டபோதிலும் கூட்டுப்படைத் தலைமை அலுவலகம் தொடர்ந்தும் மறுத்து வருவதால் கப்பலில் வரும் உணவுப் பொருள்கள் இறக்க முடியாமல் மீண்டும் திரும்பிச் செல்கிறது.

இம்மாவட்டத்திற்கு தரை மார்க்கமாகவும் கடல் மார்க்கமாகவும் உணவுப் பொருள்கள் வருவதில் தடை ஏற்பட்டு வருவதால் உலர் உணவு நிவாரணம் துரிதமாக வழங்கப்பட முடியாதிருப்பதாகச் செயலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளது. 38

## பெரியாஸ்பத்திரியில் மருந்துகளுக்குத் தட்டுப்பாடு

யாழ் பெரியாஸ்பத்திரியில் சிகிச்சை பெறுபவர்களில் சளியினால் பீடிக்கப்பட்டவர்களுக்குக் கொடுக்கப்படும் பிரதான மருந்தான 'பிறிற்றன்' சிறப், பிறிற்றன் குளிகை என்பன முடிவடைந்துள்ளதாக ஆஸபத்திரி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

தனியார் மருந்துக்கடைகளிலும் இம்மருந்துகளுக்குத் தட்டுப்பாடு இருப்பதால் அதிக விலைக்கு வாங்க முடியாதிருப்பதாக நோயாளிகள் தெரிவிக்கின்றனர்.

இதேபோல விட்டமின் 'சி' அஸ்பிறின் போன்ற குளிகைகளுக்கும் பெரியாஸ்பத்திரியில் இரு வாரங்களாகத் தட்டுப்பாடு நிலவுகிறது. 11

முக்கிய சந்தேக நபரான

## சண்முகம் இறந்தமைக்கு எம். பிகள் கண்டனம்

ராஜீவ் கொலையில் முக்கிய சந்தேகநபராகக் கருதப்பட்ட சண்முகம் என்ற நிலச்சுவாந்தார் தூக்கில்தொங்கி இறந்துவிட்டமை குறித்துக் காங்கிரஸ் எம். பிகள் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

சண்முகத்தைப் பாதுகாப்பாக வைத்திருந்து விசாரணை நடத்த முடியாமல் சி. பி. ஐ. இருந்ததையே இது காட்டுவதாக ஏழு காங்கிரஸ் எம். பி கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.


லயஞான திலகம் அமரர் என். ஆர். சின்னராசா அவர்களின் புதல்வர்கள்

என். ஆர். எஸ். ரவீந்திரன் அவர்களும்
என். ஆர். எஸ். சுதாகரன் அவர்களும்

தம் தந்தையாருக்கு அஞ்சலியாகச் செய்யும்

நாதோபாசனை

இடம்: இணுவில் ஸ்ரீ பரராசசேகரப் பிள்ளையார் கோயில்
காலம்: ஆடி 10, வெள்ளிக்கிழமை (26 - 07 - 91) பிற்பகல் 3 மணி

பங்குபற்றும் கலைஞர்கள்:

| நாதஸ்வரம் | தவில் |
| --- | --- |
| கே. ஆர். சுந்தரமூர்த்தி | கே. ஆர். புண்ணியமூர்த்தி |
| வி. கே. கானமூர்த்தி | என். ஆர். எஸ். ரவீந்திரன் |
| வி. கே. பஞ்சமூர்த்தி | என். ஆர். எஸ். சுதாகரன் |

★ மேற்படி நிகழ்ச்சியிற் கலந்துகொண்டு இளங்கலைஞர்களை ஆசீர்வதிக்கும்படி இசையபிமானிகளை வேண்டுகிறோம்.

இங்ஙனம்
இசை ஆர்வலர்கள்

A07096

★ விடுவிக்கப்பட்ட ஆசிரியை தகவல்

# காரைநகர் கரையோரத்தில் இரவில் படையினர் ரோந்து

காரைநகரில் படையினர் மாலை யானதும் பொதுமக்களை வெளியே நடமாடுவதை தடுத்து விடுவர். தீவுப்பகுதியின் கரையோரங்களில் மாலை முதல் மறுநாள் காலைவரை படையினரின் ரோந்தும், கடலில் கடற்படையினரின் கண்காணிப்பும் தீவிரப்படுத்தப்படும்.

இவ்வாறு காரைநகரிலிருந்து விடுதலை செய்யப்பட்ட களபூமியைச் சேர்ந்தவரும் பலாலி ஆசிரிய கலாசாலை பயிற்சி ஆசிரியையுமான செல்வி ஆ. பரமலக்ஷ்மி முரசொலிக்குத்தெரிவித்தார்.

கடந்த 12 ஆம் திகதி காரைநகர் கடற்படையினர் இவரை நயினாதீவுக்கு கொண்டு வந்து விட்டனர். அச்சமயத்தில் ஊரடங்குச் சட்டம் அமுலில் இருந்தமையினால் இவரை யாழ்ப்பாணம் வரநயினாதீவு, படையினர் அனுமதிக்கவில்லையாம். பின்னர் கடந்த 20 ஆம் திகதியே இவர் குறிகட்டுவான் வந்தடைந்தார்.

களபூமியில் உள்ள தன்னைப்பிள்ளையார் கோவிலில் மட்டும் பூஜைகள் நடைபெறுவதாகவும், தியாகராஜா மத்திய மகாவித்தியாலயம் இயங்குவதாகவும் அங்கு 48 மாணவர்கள் மட்டுமே பயிலுவதாகவும் அவர் தெரிவித்தார். இம்மாணவர்களில் ஒருவர் மட்டுமே ஆண்டு ஆறுக்கு மேற்பட்டவர் எனவும் அவர் தெரிவித்தார்.

காரைநகரில் 843 பொது மக்கள் படையினரிடம் சிக்கியுள்ளதாக குறிப்பிட்ட செல்வி பரமலக்ஷ்மி, அங்குள்ள சில அரச உத்தியோகத்தர்கள் தம்மை விடுவிக்கும் படி படையினரிடம் கோரியபோதிலும் அதனை இராணுவ அதிகாரிகள் ஏற்றுக் கொள்ளவில்லையாம்.

மக்களில்லாத பூட்டியிருக்கும் அனைத்து வீடுகளும்படையினரால் உடைக்கப்பட்டு கொள்ளையடிக் கப்பட்டுள்ளதாம். (30, 33)

உடுத்துறை, நாகர்கோயில்

## பல பாடசாலைகள் இயங்க முடியாத நிலை

வடமராட்சி கிழக்கில் இடம் பெற்றுவரும் இராணுவ நடவடிக்கையினால் உடுத்துறை, நாகர்கோயில் ஆகிய கொத்தணிப்பிரிவில் உள்ள பத்தொன்பது பாடசாலைகள் இயங்க முடியாத நிலையில் உள்ளன.

இங்குள்ள சில பாடசாலையில் இடம்பெயர்ந்த மக்கள் தஞ்சம் புகுந்துள்ளதால் பாடசாலைகளை இயங்க வைக்க முடியாது இருப்பதாகவும் தெரியவருகிறது.

ஒரு சில பாடசாலைகள் விமானமற்றும் கடற்படைத் தாக்குதல்களினால் சேதமடைந்திருப்பதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. 50-43

## வடம. கிழக்குக் கரையோரம் மக்களின்றி வெறிச்சோடியது

வடமராட்சிக் கிழக்குப் பகுதியில் மருதங்கேணி தொடக்கம் சுண்டிக்குளம் வரையிலான சுமார் 17 மைல் தூரப்பகுதியைச் சேர்ந்த மக்கள் இடம்பெயர்ந்துள்ளதால் அப்பிரதேசம் முழுவதும் ஒரே சூனியமாகக்காட்சியளிக்கிறது. இப்பிரதேசத்தில் ஒரே விமானக்குண்டு வீச்சுக்களும், கடற்பிரங்கித் தாக்குதல்களும் இடம்பெற்று வருகின்றன.

இதேவேளை அப்பிரதேசத்தில் மக்கள் இடம்பெயர்ந்துள்ளதையடுத்து அங்கு வீடுகளையும் உடமைகளையும் பார்க்கச் செல்வோரில் சிலர், ஏனையோரின் வீடுகள், கடைகளில் பெறுமதிமிக்க பொருள்களையும், சொத்துக்களையும் களவாடி வருகின்றனராம். (50.18)

## காயமடைந்தவர்களைக் காத்திட எழுந்திடுவீர்!

ஆனையிறவுப் போரில் காயமடைந்த போராளிகளுக்கு மக்களாற்றவேண்டிய கடமைகளை வலியுறுத்தும் சுவரொட்டிகள் நகரில் காட்சியளிக்கின்றன.

'புனிதபூமியின் மீட்புக்காகப் போராடிக் காயமடைந்த எங்கள் உடன்பிறப்புக்களைக் காத்திட எழுந்திடுவீர்'

'அன்பான பெற்றோரே, முத்தாய, மணியாய நீர் வளர்த்த பிள்ளைகளின் வீரவடுக்களை ஆற்றி மீண்டும் களம் அனுப்ப விரைந்து வாருங்கள்'

'தமிழீழ இளைஞனே! சரித்திரம் சமைத்திடும் நேரமிது. சாதனை படைத்திடும் காலமிது. புலிகளின் பாசறைக்குப் புறப்பட்டுவா'

'வீண்கதைகள்பேசாது, வீண்பொழுது போக்காது வீரப் புலி படைக்கு விரைந்து பணி செய்திடுவோம்' என்றவாறாக இச்சுவரொட்டிகளில் வாசகங்கள் உள்ளன. (16)

## போர்க்காலச் சேவை

போர்க்காலச் சேவைபுரிய விரும்பும் பொதுமக்கள், கடின உழைப்பாளிகள் தொடர்ந்து போர்ச் சேவை புரிய விரும்புபவர்கள் உடனடியாக உங்கள் பகுதிப் பிரதேச வட்டவைக் காரியாலங்களூடாகக் கோண்டாவில் மாவட்டச் செயலகத்தில் தொடர்பு கொள்ளுமாறு கோரப்பட்டுள்ளனர். ப-11

## ஆரம்பமாகும்

யாழ் தொழிநுட்பக் கல்லூரியின் சகல போதனைகளும் நாளை புதன்கிழமை மீண்டும் ஆரம்பமாகும் வகுப்புக்கள் வழமை போல் நடைபெறும் என அதிபர் அறிவித்துள்ளார்.

## கண்டெடுக்கப்பட்டது

வண்ணை, பெருமாள் கோவில் முன்பாகவுள்ள சன்மார்க்க வித்தியாசாலைப் பகுதியில் திறப்புக் கோவை ஒன்று கண்டெடுக்கப்பட்டு முரசொலி அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது

## மாணவர்களுக்கு வர்த்தகப் பயிற்சி ஏற்பாடு

வணிகவியல் பாடத்தினை ஒரு தொழில் நுட்ப நெறியாகக் கற்பிக்கும் யாழ் மாவட்டப் பாடசாலைகளில் பாடசாலைக் கூட்டுறவுச்சங்கங்களை ஆரம்பிக்க வர்த்தகக் கல்வி அதிகாரி முயற்சி செய்து வருகின்றார்.

இதற்கு முன்னோடியாக கல்விக் கோட்ட மட்டங்களில் வர்த்தக ஆசிரியர்களுக்கு பாடசாலைக் கூட்டுறவுச் சங்கங்களை அமைப்பது சம்பந்தமான கருத்தரங்குகள் நடாத்தப்படுகின்றன.

மாணவர்களுக்கு வியாபாரத் தொழிலைப் பயிற்றுவித்தல் கணக்குப்பதிவியலைப் பயிற்றுவித்தல் என்பதை செய்முறையில் கற்பிப்பதையும், சகாய விலையில் மாணவர்களுக்கு தேவையான பாடசாலை உபகரணங்களை வழங்குதலையும், மதியஉணவு முத்திரைக்கான பொருள்களை விநியோகிப்பதையும் நோக்கமாகக் கொண்டு இச்சங்கங்கள் தொழிற்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (30)

## வீரவேங்கை மோகனுக்கு நாவற்குழியில் அஞ்சலி

கட்டைக்காடு நேரடிமோதலின் போது வீர மரணத்தைத் தழுவிக்கொண்ட வீரவேங்கை மோகனின் (பொ. தமிழழகன்) புகழுடல் மக்கள் அஞ்சலிக்காக நாவற்குழி மகா வித்தியாலயத்தில் வைக்கப்பட்டது இங்கு ஆயிரக்கணக்கான மக்கள் அஞ்சலி செலுத்தினார்கள். இவ் அஞ்சலிநிகழ்வைத் தொடர்ந்து அஞ்சலிக் கூட்டம் இடம் பெற்றது

புலிகளின் இராணுவ அணிவகுப்பு மரியாதையுடன், பாண்ட் வாத்தியம் சகிதம் தச்சன்தோப்புச் சந்தி வரை ஊர்வலமாகக் கொண்டுவரப்பட்டு பின்னர் கொடிகாமம் மாவீரர் மயானத்திற்கு எடுத்துச் சென்று தீயுடன் சங்கமமாக்கப்பட்டது. (ப-15)

## அவதி

கட்டைக்காடு-வெற்றிலைக்கேணி இராணுவ நடவடிக்கைகளின் போது கடற்படைப் பீரங்கி வீச்சினால் கட்டைக்காட்டைச் சேர்ந்த செபமாலை பிரபு (06) என்னும் குழந்தை இறந்துள்ளது. அவரின் தாயார் செபமாலை மரியறோஸ்மலர், மற்றும் சிறில்மணி ஜோன்சன் ஆகியோருக்கு கையிலும், காலிலும் பலத்த காயமேற்பட்டுள்ளது. சிகிச்சை பெறுவதற்கு வசதியில்லாமல் அப்பகுதியிலேயே காயத்துடன் தங்கியுள்ளதாகத் தெரியவருகின்றது. 18

தொடர் : 2

# ஆனையிறவு

— 'அரவிந்தன்'

யாழ்ப்பாண அரசரோடு வன்னிமைகள் கடல்வழியாகவும் தரைவழியாகவும் தொடர்பு கொண்டனர். பூநகரியிலுள்ள நாகதேவன் துறையிலிருந்து கச்சாய் வரை பண்டைய படகு வழிப்பாதை இருந்தது. இதனூடாகப் பனங்காமம் வன்னிமை தொடர்பு கொண்டார். கரைச்சி, வன்னிமை ஆனையிறவு ஊடாகத் தனது பயணப் பாதையைக் கொண்டிருந்தார். புதுக்குடியிருப்பு, முள்ளியவளை, வன்னிமைகள் நல்ல தண்ணித் தொடுவாய், சுண்டிக்குளம் ஊடாக யாழ்ப்பாண அரசுக்குள் நுழைந்தனர். பண்டைய ஆனையிறவுப் பாதை என்பது, இன்றைய பாதையன்று இயக்கச்சியிலிருந்து புல்லாவெளியூடாகத் தட்டுவங் கொட்டியை அடைந்து பழைய வட்டக்கச்சிக் கிராமம் ஊடாக மூறிகண்டிக்குச் சென்ற பாதையாகும். இப்பாதையூடாகவே கண்டியிலிருந்தும், தென்னிலங்கை அரசுகளிலிருந்தும் யாழ்ப்பாண இராச்சியத்துடனான தொடர்பு இருந்துள்ளது.

ஆனையிறவு என்ற பெயர் எவ்வாறு இந்தப் பகுதிக்கு வந்ததெனப் பார்க்கில், வரும் அர்த்தம் தெளிவானது. பச்சிலைப் பள்ளி தொட்டு பெருநிலப்பகுதியான பூநகரி—கரைச்சிப் பகுதிகள் அடர் காடு செறிந்திருந்தது. கடல் வற்றுக் காலத்தில் யானைகள் அங்கிருந்தும் இங்கிருந்தும் இடம் மாறின. அவ்வாறு இடம் பெயர்வதற்கு உகந்த ஒடுங்கிய, குறுகிய வழியாக ஆனையிறவு விளங்கியது. 'இறவு' என்றால் இறக்கம் அல்லது பள்ளம் எனவும், 'கடத்தல்' எனவும் பொருள்படும். யானைகள் கடக்கின்ற பகுதி இதுவாதலால் இப்பெயர் நிலைத்துவிட்டது. மேலும், பண்டை நாளிலிருந்து, இவ்வழியூடாகவே யானைகள், யாழ்ப்பாணத்துக்கு அழைத்து வரப்பட்டன. மாத்தறைப் பகுதிகளில் பிடிக்கப் பட்ட யானைகளும், வன்னிப்பிரதேசங்களில் பிடிக்கப்பட்ட யானைகளும் பணிக்கர்களாலும் (யானை பிடிப்பவர்), பாகர்களாலும் இப்பாதையூடாகக் கொண்டுவரப்பட்டன. காட்டு யானைகள் மட்டுமல்ல, பிடித்துப்பழக்கிய யானைகளும் ஆனையிறவூடாகக் கடந்தன. ஆனையிறவுக் கடனீரேரியில் விளைகின்ற தன்படுவன் உப்பை (தானாக விளையும்உப்பு) உண்பதற்காக வன்னிக் காட்டு யானைகள் இப்பகுதிக்கு அடிக்கடி வந்தன.

தென்னிலங்கைச் சிங்கள மன்னர்களிடமிருந்து, இழந்து போன தமிழ்ப்பிரதேச உரிமையை வென்றெடுப்பதற்காக நிகழ்ந்த தென்னிந்தியத் தமிழ்ப் படையெடுப்புகள், இந்த ஆனையிறவுப் பகுதியூடாக நிகழ்ந்துள்ளன. கண்டிப்பகுதிக்கு யாத்திரை சென்ற துறவிகள் இப்பாதையூடாகத் தமது பயணத்தை மேற்கொண்டனர் என்பதற்கும் ஆதாரமுள்ளது

கி. பி. 1620 ஆம் ஆண்டு யாழ்ப்பாண அரசு, போர்த்துக்கேயர் வசமானது. அவர்கள் தமது பாதுகாப்பினைப் பலப்படுத்துவதிலும், சமயப் பிரசாரம் செய்வதிலும் அதிக கவனம் செலுத்தினர். யேசு சபையார் முதன்முதல் அமைத்த பத்துக்கிறிஸ்தவ தேவாலயங்களில் நான்கு பச்சிலைப்பள்ளியில், புலோப்பளை, சுண்டிக்குளம், முகமாலை, தம்பகாமம் ஆகிய சிற்றூர்களில் அமைந்தமை குறிப்பிடத்தக்கது. சுண்டிக்குளத்தில் அமைந்த தேவாலயம் 1627 ஆம் ஆண்டு வீசிய புயலினால் அழிவுற்றது.

போர்த்துக்கேயர் தமது பாதுகாப்பின் பொருட்டுப் பலவிடங்களில் பலமான கோட்டைகளை அமைத்தனர். யாழ்ப்பாணக் கோட்டையையும், ஊர்காவற்றுறையில் ஹெமன் ஹீல் கோட்டையும் அமைத்தனர். யாழ்ப்பாணக்கோட்டைக்குள் 150 பறங்கிகளைக் கொண்ட 3 பட்டாளங்கள் இருந்தன. ஆனையிறவில் ஒரு கோட்டையை அமைக்க வேண்டியதன் அவசியத்தைப் போர்த்துக்கேயருக்கு உணர்த்திய சம்பவம் ஒன்று, 1628 இல் நிகழ்ந்தது.

கண்டி மன்னன் செனரத், தனது முதலியார்களில் ஒருவராகிய அத்து பத்து முதலியாரின் தலைமையில் ஆயிரம் வீரர்கள் வரையிலான பெரும் படையொன்றினை, யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றும்படி அனுப்பிவைத்தான். அப்பெரும் படை ஆனையிறவூடாகப் பச்சிலைப் பள்ளியில் பிரவேசித்தது. செனரத் மன்னனின் மகன் யாழ்ப்பாண அரசின் இளவரசி ஒருத்தியை மணந்திருந்தான். அதனால் மன்னர்களற்ற யாழ்ப்பாண அரசு தன் மகனுக்குரியதென தன்னுரிமையை நிலைநாட்டும் பொருட்டு போர்த்துக்கேயர் மீது தண்டெடுத்தான். பச்சிலைப்பள்ளியில், ஆனையிறவூடாகப் பிரவேசித்தபடை, பச்சிலைப்பள்ளியல் இருந்த கிறிஸ்தவத் தேவாலயத்தை இடித்துத் தள்ளியது. அத்துடன் நில்லாது அங்கிருந்த இரு குருமாரையும் கொன்றனர். பின்னர், யாழ்ப்பாணக் கோட்டையைச் சூழ்ந்து 13 நாள்கள் முற்றுகையிட்டனர். கண்டிச் சிங்களப்படைக்குப் பயந்த போர்த்துக்கேயர்கோட்டைக்குள் பதுங்கியிருந்தனர். எனினும், கொழும்பிலிருந்து வந்த படை சிங்களப்படையை நிர்மூலமாக்கியது. கடல் வழிப்பகைமையை அழிப்பதற்குக் கடற்கரைகளில் கோட்டைகளை அமைந்தது போல், தரையூடாக வரும் படைகளை ஒடுக்குவதற்கு ஆனையிறவில் ஒரு கோட்டை அமைக்கப்பட வேண்டியதன் அவசியத்தைப் போர்த்துக்கேயர் உணர்ந்தனர்.

ஆனையிறவுப் பகுதியில் ஒரு கோட்டை மட்டும் கட்டுவதன் மூலம், உட்பகையைச் சமாளிக்க முடியாதெனக் கண்டனர். போர்த்துக்கேயப் பறங்கிகளின் ஆதிக்கத்தின் கீழ் யாழ்ப்பாண இராய்ச்சியம் இருந்தாலும் வன்னிச் சிற்றரசுகள் தொடர்ந்தும் தமது சுதந்திரத்தைப் பேணின. திறையாக வன்னிச் சிற்றரசர்கள் யானைகளையும், மான் தோல்களையும், வேறுபல பொருள்களையும் தமக்குச் செலுத்தி மரியாதை செய்ய வேண்டுமென்ற கட்டளைகளை வன்னிமைகள் ஏற்கவில்லை. அவர்கள் பலமுறையும் சுண்டிக்குளம் பாதையூடாகவும், கண்டாவளை தட்டுவங் கொட்டிப் பாதையூடாகவும், பச்சிலைப்பள்ளிப் பிரதேசத்தினுள் நுழைந்து அட்டகாசம் செய்தனர். (வளரும்)

# மானிப்பாய் ஆஸ்பத்திரி தாதிக்கு அதி உன்னத விருது

நோயாளருக்கும், காயப்பட்டோருக்கும், கருணையுடனும், நேசத்துடனும், அன்புடனும், புரிந்துணர்வுடனும் நிகரற்ற சேவையினை அர்ப்பணித்த செஞ்சிலுவைச் சங்க பெண் தாதிக்கோ அல்லது தொண்டர் உதவியாளருக்கோ பெருமையுடனும் பூரண திருப்தியுடனும் பரிந்தளிக்கப்படும் சர்வதேச தனிப்பெரும் சிறப்புப் பெற்றதும், சர்வதேச செஞ்சிலுவைக் குழுவின் மிக அதி உன்னத விருதான புளோறன்ஸ் நயிற்றிங்கேல் பதக்கம் செல்வி சிதம்பர நடராஜா பாலரத்தினம் என்ற மானிப்பாய் கிறீன் ஞாபகார்த்த வைத்திய சாலைத் தாதிக்கு வழங்கப்படவுள்ளது.

இன்று முற்பகல் 11. மணிக்கு மானிப்பாய் கிறீன் ஞாபகார்த்த வைத்தியசாலையில் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க யாழ்ப்பாணக் கிளை உறுப்பினர்களால் அளித்துக் கௌரவிக்கப்படவுள்ளது. (33)

# யாழ் ஆஸ்பத்திரி பகுதியில் பலர் சிரமதானம்

யாழ் போதனா வைத்திய சாலை வளாகப்பகுதிவார்ட்டுகள், வெளிப்பகுதிகள் என்பன மாநகரசபை சுத்திகரிப்புத் தொழிலாளர்கள், சகல தொண்டர் படையினர், மற்றும் வைத்தியசாலை ஊழியர்களும் சேர்ந்து சிரமதான மூலம் துப்புரவு செய்துவருகின்றனர்.

கட்டிடச்சிதைவுகள் அகற்றப்பட்டதுடன் பாவனைக்குட்படாமலிருந்த விடுதிகள் போன்றன நேற்று சிரமதான மூலம் துப்பரவாக்கப்பட்டன.

வைத்தியசாலை வளாகப் பகுதியை சகல ஊழியர்களும் ஒன்று சேர்ந்து தூய்மைப்படுத்தும் பணியில் சிரமதான மூலம் ஈடுபட்டு வருகின்றனர். (79)

# வீரமரணமடைந்த வேங்கைகள்

ஆனையிறவுப் பகுதியில் கடந்த 13 ஆம் திகதி நடைபெற்ற மோதலில் வீரமரணமடைந்தோர்

மன்சூர்(கதிரிப்பிள்ளை செல்வகுமார் பருத்தித்துறை), நார்த்தீபன்(அழகராசா புஸ்பராஜா பருத்தித்துறை), கேசரி (பாலகிருஷ்ணன் அரசகேசரி தம்பசிட்டி), டக்ளஸ் விக்னேஸ்வரராஜா சதீஸ்வரன் மானிப்பாய்), சுரேஸ் (கணேஸ் புலேந்திரன் தாழையடி), ஜவரின் (கிருஷ்ணபிள்ளை சுதாகர் அல்வாய் மேற்கு), சசி சுப்பிரமணியம் குமரன் அல்வாய்), கரன் (பொன்னம்பலம் ஜெயக்குமார் அச்சுவேலி), அகிலன் (கதிர்காமு பாலச்சந்திரன் முள்ளியான்), அம்பழகன்(சுந்தரலிங்கம் ஜெயகாந்தன் கிரான்), பரண் (தியாகராஜா மோகனராஜா மன்னார்), தனேந்திரன்(துரைசிங்கம் சிறிகரன் மாரீசன்கூடல்), நடா (தங்கராசா பாஸ்கரன் அம்பாறை, லோகி(வேலாயுதம் சிவகுமார் பருத்தித்துறை), (ஜெகன்நடராசா தவராசா பூநகரி), கணேஸ் (இராஜதுரை ஜெயரட்ணம் முள்ளியவளை) டொனால்ட் (இராமசாமி புவனகுமார் கிளிநொச்சி, கஜன் (சின்னையா சீவரத்தினம் அளவெட்டி), மஞ்சுதன் (சிவமாலை குகநேசன் வவுனியா), குலசிங்கம் (இராசலிங்கம் றேமன் மட்டக்களப்பு), காசி (மரியான்ரிஞானம் மாங்குளம்), அங்குதன் (நடராஜா ராஜ்குமார் இணுவில் கிழக்கு), மெரடோனா (கைலாசபிள்ளை சந்திரகுமார் கிண்ணியா), திலகன் (அருணாசலம் சிவநாதன் மண்டூர்), மருது (இராமசாமி மருதலிங்கம் ஒட்டுசுட்டான்), வரதன் (வாரகன்) (சின்னத்துரை சர்வகுமார் அளவெட்டி), யுகந்தன் (நடராசா பத்மநாதன் கொக்குத்தொடுவாய்), அப்பன் (ஜோன் செபஸ்ரா திருமலை), பிரசாத் (கந்தசாமி மனோகரன் மூதூர்), பார்த்திபன் (டொமினிக் கெனியூட் மன்னார்), நாகராசா (முத்துராஜா நாகராஜா மாங்குளம்) கிறோ, அர்ச்சுனா. தமயந்தி (வைத்தியநாதன் கமலலோஜினி இலுப்பைக்கடவை), வினோசா (சுவாம்பிள்ளை விஜிதா பாசையூர்), தவமலர் (ஈஸ்வரபாதம் மஞ்சுளாதேவி தாழையடி), நேதாஜி (சிவஞானம் விஜயகுமாரி நெடுங்கேணி), நிசா (சின்னத்தம்பி விஜயகுமாரி புலோலி தெற்கு) கவி (சீவரட்ணம் ராஜி உடுப்பிட்டி), அனோஜா (லோகநாதன் சிறீகலா கரடியனாறு), மாலா (யாக்கோப் சில்வா ரோஸ் மங்கலிப்பா பூங்குளம்), கண்மணி சறோஜினி முருகையா மன்னார்), மீனாட்சி (ராஜரட்ணம் கலைச்செல்வி முள்ளியவளை), அமுதப்பிரியா (பரமலிங்கம் அகிலகுமாரி புங்குடுதீவு), பூபாலினி (நாகரத்தினம் பரமேஸ்வரி முல்லைத்தீவு, சுயின்சி (தர்மராசா தயாநிதி வட்டுக்கோட்டை).

**புலிகளிடம்...**

போராளிகள் வீரமரணமடைந்தனர்.

இதேவேளை புல்லாவெளியில் சிக்கிக் கொண்ட படையினர் தமது தரப்பில் 40க்கும் மேற்பட்ட சிப்பாய்களை இழந்ததுடன் நூற்றுக்கணக்கானோர் காயமடைந்தனர். 79

**வவுனியா**

இதில் கருவேப்பங்குளம் பகுதியில் 5 காவலரண்கள் புலிகளால் அழிக்கப்பட்டன. எட்டுப் படையினர் மோதலில் பலியாகினர் இவ்வேளையில்படையினருக்கு உதவி வழங்க பிரதான முகாமிலிருந்து வந்த இராணுவத்தினர் மீதும் புலிகள் தாக்குதலைத்தொடுக்கவே அப்படையினர் முகாமுக்குத் திரும்பி விட்டனர்

படையினரிடமிருந்து 303 ரைபிள் - 4, ரவை கூடு - 4, ரி - 56 - 2, ரவை கூடுகள் - 10, ஆர். பி. ஜி - 1, ஷெல்-6, புறப்பலர் - 6, ஜே. ஆர் குண்டு - 2, ஐ. எம். ரவைகள் - 4025, 303 ரவைகள்- 747 என்பன மீட்கப்பட்டன.

இம்மோதலில் புலிகள் தரப்பில் லெப். பாண்டியன் (செ. சிவதாஸ் ஓமந்தை), ஜீவா (அஞ்சான், மோகன் புத்தளம்) ஆகியோர் வீரமரணமடைந்தனர்.

# கடற்படை தாக்கியதால் படகு முற்றாக எரிந்தது

பூநகரிப் பகுதியில் உள்ள காஞ்சகாட்டுப் பகுதி கடற்கரை ஊடாக சென்றுகொண்டிருந்த படகொன்றின் மீது கடற்படைப் பீரங்கிப் படகு திடீர்த் தாக்குதலை நடாத்தியதில் படகு தீப்பற்றி முற்றாக எரிந்தது. இதே நேரம் கடல் வேவு விமானம் ஒன்றும் இங்கு வட்டமிட்டுச் சென்றது

அந்தப் படகில் பயணம் செய்த மூவர் இதனால் கடலில் குதித்து நீந்தி தப்பி வந்து சேர்ந்துள்ளனர். இவர்களில் ஒருவர் காயமடைந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது

இம்மூவரும் யாழ் நகரப் பகுதியைச் சேர்ந்தவர்கள் எனவும் தெரியவருகிறது.

இந்தப் பகுதியில் கடந்த சில நாள்களாகக் கடற்படையினரின் நடமாட்டம் அதிகரித்துள்ளதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது, ப-11

## இயக்கச்சி நோக்கி ஷெல்

கட்டைக்காட்டுப் பகுதியிலிருந்து படையினர் இயக்கச்சி, பளை ஆகிய பகுதிகளை நோக்கி இரவு பகலாக ஷெல் தாக்குதல் நடாத்தி வருகின்றனர்.

நேற்று அதிகாலை நடாத்தப்பட்ட ஷெல் தாக்குதலில் பளையைச் சேர்ந்த வயோதிபர் ஒருவரும் பெண்ணும் காயமடைந்துள்ளனர்.

## அவசர அழைப்பு

இன்று காலை 8 மணிக்கு முன்னர் சகல விடுதலைப் புலிகள் மாணவர் இயக்க உறுப்பினர்களும் யாழ் ஆஸ்பத்திரி முன்பாக உள்ள பாலம் பணிமனையில் சமூகம் தருமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

## விசேட கூட்டம்

முறைசாராக்கல்விப்பிரிவில் பயிற்சி பெற்ற மாணவர்களுக்கான கூட்டம் எதிர்வரும் வியாழக்கிழமை காலை 9.00 மணிக்கு யாழ் இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறும் முறைசாராக் கல்வி சகல பாடநெறிகளிலும் பயிற்சி பெற்ற மாணவர்களும், சகல முதலுதவி நிலைய அங்கத்தவர்களும் தவறாது பங்குபற்றுமாறு கேட்கப்படுகின்றனர்.

**விமானக்...**

ஹெலிக்கப்டர் என்பன கடும் வான்தாக்குதலை நடாத்திக் கொண்டிருப்பதாகப்பிந்திக் கிடைத்த செய்திகள் தெரிவித்தன

**சடலங்கள்...**

செஞ்சிலுவையினரும் இது தொடர்பாகக் கொழும்புடன் நேற்றுக்காலை தொடர்பு கொண்டு சடலங்களை படையினர் மீளப்பெறுவது குறித்து அறிவித்தனர்.

எனினும் நேற்று மாலை வரை கொழும்பு இராணுவ தலைமையகத்திடமிருந்து செஞ்சிலுவைச் சங்கத்துக்கு எந்தவிதமான பதிலும் கிடைக்கவில்லை. (79)

**அதிரடி...**

ஆயுதங்களையும், பெருமளவு கிரனைட்டுக்களையும் படையினர்விட்டுச் சென்றுள்ளனர்.

இதில் போராளிகளால் கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் விவரம் வருமாறு;

- ★ ரி 56 ரக எல். எம். ஜி. துப்பாக்கி - 3
- ★ 203 டொங்கான் - 3
- ★ 40 எம் எம். ரி 69 ரக ஆர். பி. ஜி. - 2
- ★ 60 எம். எம். மோட்டார் - 3
- ★ ரி 56 ரகத் துப்பாக்கி - 25 க்கும் மேல்
- ★ ஜி. பி. எம். ஜி. - 1
- ★ ரி. 56 ரகத் துப்பாக்கி - 1
- ★ ரி. 81 ரகத் துப்பாக்கி - 1

மேலும் சில ஆயுதங்கள் முள்ளியான் - கட்டைக்காட்டுப் பகுதியில் மீட்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (79)

## 17 போராளிகளுக்கும் பண்டத்தரிப்பில் அஞ்சலி

கட்டைக்காடு, வெற்றிலைக்கேணி பகுதியில் இடம்பெற்ற மோதலில் வீரமரணமடைந்த பதினேழு போராளிகளின் புகழுடம்புகள்நேற்று பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியில் அஞ்சலிக்காக வைக்கப்பட்ட போது பல்லாயிரக் கணக்கானவர்கள் தங்கள் இறுதி அஞ்சலியைச்செலுத்தினார்கள்.

பண்டத்தரிப்புப்பகுதியிலுள்ள வர்த்தக நிலையங்கள் யாவும் மூடப்பட்டிருந்தன.

பிரதான வீதியில் வாகனங்களில் புகழுடம்புகள் கொண்டுவரப்பட்ட போதும் வழி நெடுகிலும் மக்கள் திரண்டு நின்று மலரஞ்சலி செலுத்தினர்.

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தைச்சேர்ந்த தேவர் அங்கு இரங்கலுரை நிகழ்த்துகையில் தமிழினத்தின் மானத்திற்கு விடுக்கப்பட்ட சவாலாக இப்போராட்டத்தை ஏற்றுக் கொண்டு ஆயிரமாயிரமாக திரண்டு வந்து இப்போராட்டத்தில் தமிழீழ மக்கள் அனைவரும் தங்கள் பங்களிப்பைச்செலுத்த வேண்டும் என்று குறிப்பிட்டார்.

திரு. குகதாசன், மாஸ்டர், திரு. பரா, மகளிர் பிரிவைச் சேர்ந்த ஜெயா ஆகியோரும் அஞ்சலியுரைநிகழ்த்தினார்கள்

பின்னர் கோப்பாயிலுள்ள மாவீரர் மயானத்தில் புகழுடம்புகள் தீயுடன் சங்கமமாகின. 13, 37

## ராணுவ சடலங்கள், ஆயுதம் முத்திரைச் சந்தியில்

புல்லாவெளி, முள்ளியான் பகுதி யுத்தத்தில் கொல்லப்பட்ட படையினரின் சடலங்களும் அவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட ஆயுதங்களும் இன்று பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்படவுள்ளன

இன்று காலை 10 மணியளவில் நல்லூர் முத்திரைச் சந்தையில் இவை பார்வைக்கு வைக்கப்படலாம் எனத் தெரியவருகிறது. (79)

## படையினர் சடலங்களை தாண்டிச்சென்று தாக்குதல்

நேற்று முன்தினம் புல்லாவெளி, முள்ளியான் பகுதியில் இராணுவ அணியை ஊடறுத்துத் தாக்குதலை ஆரம்பித்த விடுதலைப்புலிகள் அணி ஒரு கட்டத்தில் படையினரின் சடலங்களைத் தாண்டிச்சென்று தாக்குதலைத் தொடர வேண்டியிருந்ததாக யுத்தமுனைச்செய்திகள் தெரிவித்தன.

படையினர் இறந்த தமது சகாக்களைவிட்டுவிட்டு ஓடியதாகவும் இதனால் சடலங்கள்ஆங்காங்கே சிதறிக்கிடந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. (79)

## இன்று முதல் தபால் சேவை

யாழ் குடாநாட்டில் இன்று முதல் சகல தபாற்கந்தோர்கள் உட்பட உப தபாற் கந்தோர்களும் வழமைபோல இயங்கவுள்ளன.

இதே சமயம் பருத்தித்துறையில் கப்பலில் வந்து தேங்கிக்கிடக்கும் வெளிமாவட்ட, வெளிநாட்டுத் தபால்களை எடுத்துவந்துவிநியோகிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. 33

**ஆனையிறவு...**

ஆனையிறவைச் சென்றடைவார்கள் என இப்போது கூற முடியாதுள்ளது என இராணுவ அதிகாரிகள் தெரிவித்துள்ளனராம்.

**காற்றும்...**

பதாகக் கொழும்புச் செய்திகள் மூலம் தெரியவருகிறது.

இதற்கு முக்கிய காரணமாகக்கடும் மழையுடன் கூடிய காற்று வீசுவதே என கொழும்புச் செய்தியாளர் காரணம் காட்டியுள்ளார்.

இதேவேளை கட்டைக்காட்டுப் பகுதியில் நிலை கொண்டுள்ள படையினரின் உறவினர்கள் இராணுவத்தினரின் சிங்கள, ஆங்கில செய்திகள் கேட்பதில் தவறவில்லை யெனவும் தெரியவருகிறது. ப-11

## ஷெல் தாக்குதல்

நேற்றிரவு 8-45 மணியளவில் ஊர்காவற்றுறைப் பகுதியில் நிலை கொண்டுள்ள இராணுவத்தினர் அங்கிருந்து குடிமனைகளை நோக்கி ஷெல் தாக்குதல்களை மேற்கொண்டனர் எனினும் சேத விவரம் தெரியவில்லை.

இதேவேளை படையினர் இடையிடையே துப்பாக்கிப் பிரயோகமும் மேற்கொண்டவண்ணம் உள்ளனர். (ப-11)

## 'ஓ' பிரிவு இரத்தம் தேவை

யாழ் போதனா வைத்திய சாலைக்கு அவசியம் இரத்தம் தேவைப்படுவதாக ஆஸ்பத்திரியின் இரத்தவங்கிப பிரிவு அறிவித்துள்ளது.

முக்கியமானதும் தற்போது அவசியம் தேவைப்படுவதுமான ''ஓ'' பிரிவு இரத்தம் உடையவர்கள் உடனடியாக இந்த இரத்ததானத்தைவழங்குமாறு கோரப்பட்டுள்ளனர். ப 11

**பேரணி...**

யில் நடைபெற்றது.

இதில் ''வேங்கையின் வெற்றிப் போர் தொடர்கிறது. இன்னுமா தூக்கம்......?, பொறிகக்கும் விழியோடு புலியாகிப் போராடத் தம்பியரே, தங்கையரே வீட்டுக்கொரு வீரராய் புலிகளின் பாசறைக்குப் புறப்பட்டு வாருங்கள், தந்தையரே துணைப் படையில் சேருங்கள்'' எனவும் தெருக்கூத்தில் வந்தவர்களால் எடுத்துக் கூறப்பட்டது. (ப-11)

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷேர்ஸ் (பிறைவேற்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ் கல்வியங்காடு டச்சுவீதி 'லக்ஷ்மி பில்டிங்'இல் உள்ளஅச்சகத்தில் 23.07.91 இல்அச்சிட்டு வெளியிடப்பெற்றது.